Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 29 2025

புதன்கிழமை 29 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 147 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்க

# யாழில் மூன்று நாள் கவனயீர்ப்பு




நிதர்ஷன் வினோத்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் யாழ் வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக குறித்த சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட வடமாகாண பட்டதாரிகள் சங்க ஊடக பேச்சாளர் கி.டனிசன், மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைக்கு சரியான வகையில் இதுவரை எந்த ஒரு தரப்பினரும் தீர்வை தரவில்லை.வடக்கு ஆளுநரிடம் பல தடவைகள் கோரிக்கை முன்வைத்திருந்தும் அவரும் எம்மை கண்டு கொள்ளாதவராகவே இருந்து வருகின்றார். இந்நிலையில் வேலையற்ற பட்டதாரிகள் ஆகிய நாம் புதன்கிழமை (29) முதல் 31 ஆம் திகதி வரை எமது பிரச்சினைகளை வெளிக்கொணரும் வகையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

தொடர்ச்சி P2



## சிலுவையின் காலில் இருந்து வடிந்த நீர்



பு.கஜிந்தன்

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் காணப்படும் ஆண்டவர் சிலுவையில் இருந்து செவ்வாய்க்கிழமை (28) நீர் கசிந்துள்ளது

ஆண்டவர் சிலுவையின் கால் விரல் பகுதியில் இருந்து மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நீர் கசிந்தது சம்பவம் அறிந்து பல்வேறு இடங்களில் இருந்து வருகை தந்த மக்கள் ஆண்டவரின் காலில் இருந்து வழிந்தோடும் நீரை எடுத்துச் சென்றனர்.

தொடர்ச்சி P2

## "சாத்தியமான அனைத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளும்"



"நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கும் தற்போதைய அரசாங்கம் சாத்தியமான அனைத்து முடிவுகளையும் எடுக்கும்" என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

சர்வதேச சுங்க தினத்தையொட்டி சுங்கத் திணைக்கள கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) பிற்பகல் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## முட்டையின் விலை பதுளையில் சரிந்தது

பாலித ஆரியவன்ச

பதுளையில், இந்த நாட்களில் ஒரு முட்டையின் விலை ரூ.25 லிருந்து ரூ.28 ஆக விற்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# வாகனங்கள் இறக்குமதி குறித்து விசேட அறிவிப்பு

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை விற்பனை செய்ய வேண்டுமாயின் 90 நாட்களுக்குள் உரிய கொள்வனவாளரின் பெயரில் மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதி தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க திங்கட்கிழமை(27) இந்த வர்த்தமானியை வெளியிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2



## வரி குறைப்பு



பேரிச்சம்பழத்திற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தக வரியைக் குறைத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது காணப்படும் 200 ரூபாய் விசேட வர்த்தகப் பொருட்கள் வரி ஒரு ரூபாய் வரை குறைக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2



## காயமடைந்த இந்திய மீனவர்களை இந்திய துணைத்தூதுவர் சந்தித்தார்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களை கைது செய்யும் போது இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக, செவ்வாய்க்கிழமை (28) அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## உள்நாட்டு விமான சேவைகளை வருகிறது




உள்நாட்டு விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மாவைக்கு வருத்தம்



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக செவ்வாய்க்கிழமை (28) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## "சலுகைகளை குறைக்கவோ நீக்கவோ முடியாது"

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் குறைக்கபடுவதற்கான உத்தேச விவாதத்தை அடுத்து, பிவிதுரு ஹெல உறுமய (PHU) தலைவர் உதய கம்மன்பிலவின் கருத்து இது தொடர்பாக மேலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அரசியலமைப்பு மற்றும் உலகளாவிய சட்டக் கோட்பாடுகளின்படி அச் சலுகைகளை குறைக்கவோ அல்லது நீக்கவோ முடியாது என தெரிவித்துள்ளார் .

தொடர்ச்சி P2



## அதிக விலையில் அரிசி விற்றவருக்கு அபராதம்


கிரிபத்கொட பகுதியில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடிக்கு, உள்ளூர் வெள்ளை பச்சை அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட வர்த்தகருக்கு நீதிமன்றம் ரூ.1 மில்லியன் அபராதம் விதித்து திங்கட்கிழமை (27) உத்தரவிட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்ட நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த சமர்ப்பிப்பின் அடிப்படையில் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

பல்பொருள் அங்காடியில் ஒரு கிலோ கிராம் உள்ளூர் வெள்ளை அரிசியை ரூ. 255க்கு விற்பனை செய்தது தொடர்பாகவும் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் நீதிமன்றம் ரூ. 3 மில்லியனுக்கும் அதிகமான அபராதம் விதித்துள்ளது. அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்பவர்கள் மீது வழக்குகள் தொடர உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபை கூறுகிறது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## “சாத்தியமான அனைத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளும்”

“இந்த வருடம் சர்வதேச சுங்க தினம் “ சுபீட்சமான தேசத்தை உருவாக்க வினைத்திறனான சுங்கத் திணைக்களம்” என்ற தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது.

1952 ஆம் ஆண்டு 17 ஐரோப்பிய நாடுகளின் பங்கேற்புடன் சுங்க ஒத்துழைப்பு கவுன்சிலாக நிறுவப்பட்ட இந்த சர்வதேச அமைப்பில் 1967 ஆம் ஆண்டு இலங்கை உறுப்பினராக இணைந்தது. 1994 ஆம் ஆண்டில், சுங்க ஒத்துழைப்பு கவுன்சில் உலக சுங்க அமைப்பு என பெயரிடப்பட்டது.

1953 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற சுங்க ஒத்துழைப்பு கவுன்சிலின் முதல் அமர்வை நினைவுகூரும் வகையில் இந்தத் தினம் சர்வதேச சுங்க தினமாக பெயரிடப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் திகதி, உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள சுங்க நிறுவனங்கள் சர்வதேச சுங்க தினத்தைக் கொண்டாடுகின்றன.

யுகத்திற்கு ஏற்ற நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் ” என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

காலத்தின் சவால்களுக்கு ஏற்ப சட்டம் அல்லது நிறுவனங்கள் மாற வேண்டும் என்றும் எந்தவொரு சட்டமோ அல்லது நிறுவனமோ எக்காலமும் நிலையாக இருக்க முடியாது என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் கருத்து தெரிவிக்கையில்:

கடந்த ஆண்டு சுங்கத்திற்கு வழங்கப்பட்ட பொறுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை சீராக்க சுங்கம் மேற்கொண்ட முன்னெடுப்புகள் பாராட்டத்தக்கவை. கடந்த ஆண்டு சுங்கம் அடைந்த இலக்குகளை நாங்கள் பாராட்டுறோம். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை, வருவாய் இலக்குகளை அடைவதன் மூலம் மட்டும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, வருமான விகிதத்தை அதிகரிக்க வேண்டும். பொருளாதார சரிவு காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சந்தை சுருங்கியது. சர்வதேச நாணய நிதியத்தின் அளவீடுகளின்படி நாம் அனைத்து பணிகளையும் மேற்கொள்கிறோம். எனவே, மேலோட்டமாகப் பார்க்கும்போது பொருளாதார தேகம் மீண்டுவிட்டதாகத் தோன்றினாலும், முழு பொருளாதார கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பொருளாதார நெருக்கடியை சீராக்க நாம் கவனமாக செயற்பட வேண்டும்.

ஒரு சிறிய தவறு கூட பொருளாதாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும். எனவே, சுங்கத் திணைக்களம் 2550 பில்லியன் ரூபாய் வருமான இலக்கை எட்டுவதற்கு கூட்டாகச் செயல்பட வேண்டும்.

சுங்கத்திற்கான வசதிகளை வழங்குவது தொடர்பிலும் புதிய சம்பள அளவை ஸ்தாபிப்பது தொடர்பிலும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அது குறித்து நிதியமைச்சு, திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்வொன்றை வழங்க எதிர்பார்க்கிறேன்.

இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. அரச சேவையை மேலும் திறம்படச் செயற்படுத்த, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பத்தை இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. வலுவான நிறுவன கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

முன்னைய அரசியல் தரப்பு மற்றும் அரச சேவை பொறிமுறைக்கு இடையே முரண்பாடுகள் இருந்தன. அந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்த அரசியல் தரப்பில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களை சரியான நேரத்தில் மேற்கொள்ள முடியவில்லை. சரியான நேரத்தில் நல்லதொரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க தவறியதால் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் கிடைக்கவில்லை. அதனால் நாம் பல விடயங்களை கையகப்படுத்தும் முன்பாக வெளியாட்கள் அவற்றை கைப்பற்றிக் கொண்டனர். இதன் விளைவாக, இலங்கையின் இயற்கையான அமைவிடத்தைப் பயன்படுத்துவதற்கான சில வாய்ப்புகளை ஒரு நாடு என்ற வகையில் இழந்திருக்கிறோம்.

## ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்க
# யாழில் மூன்று நாள் கவனயீர்ப்பு

குறிப்பாக எமது மூன்று நாள் போராட்டமானது 29 ஆம் திகதி “பசுமை தானம்” எனும் தொனிப்பொருளில் மரக்கன்று விநியோகித்தல் உடன் யாழ் வீரசிங்கம் மண்டபம் முன்றலில் ஆரம்பிக்கப்படும், 30 ஆம் திகதியன்று கலைத்தூது கலையரங்கில் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

இறுதி 31 ஆம் திகதியன்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகைதருகின்றார். அவரது யாழ் வருகையின் போது யாழ். மாவட்ட செயலகம் முன்பாக பட்டதாரிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு எமது நிலையை எடுத்துக் கூறும் வகையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வட மாகாணம் தழுவிய ரீதியில் உள்ள பட்டதாரிகளின் சார்பில் ஒலிக்கும் குரலாக இது நடைபெறும் எமது இந்த போராட்டத்திற்கு வலுச்சேர்க்க அனைத்து தரப்பினரிடமிருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் என்றும் அழைப்பு விடுத்தது குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் குறித்த சங்கத்தின் தலைவர் சசிதரன் கூறுகையில் -

வேலையற்ற பட்டதாரிகள் என்ற வகைக்குள் கலைத்துறையில் பட்டங்களை பெற்றவர்களே முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலைக்கு நாட்டின் கல்வி கட்டமைப்பே காரணமாக இருக்கிறது. இதேவேளை நாட்டின் கல்வி திட்டத்தின் ஊடாக முறையான தகுதி திறனை நாம் கொண்டிருக்கின்றோம்.

எமக்கு வேலைவாய்ப்பு வழங்க படவில்லை எனில் அதற்கான முழுப் பொறுப்பும் இந்த கல்வி திட்டத்தை கொண்டிருக்கக்கூடிய அரசினதே ஆகும்.

வடமாகாணத்தில் இன்று பல்வேறுபட்ட திணைக்களங்களில் வேலைவாய்ப்பு வெற்றிடம் காணப்படுகின்றது. இலங்கை அரச கட்டமைப்பின் பட்டப்படிப்பு மூலமே நாம் கல்வித் தகுதியை பெற்றுள்ளோம்.

அதற்கு உரிய தொழில் வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, அரசுக்கு அழுத்தம் கொடுக்க நாம் இவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறோம்.

இதேநேரம் ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு எமது நிலைப்பாடுகள் அடங்கிய கோரிக்கை கடிதம் ஒன்றினை வழங்கியுள்ளோம்.

மேலும் அரசாங்கம் உருவாகி சில மாதங்களே கடந்துள்ளது. இந்த அரசாங்கமாவது எமக்கான தீர்வை தரும் என நாம் எதிர்பார்த்தோம்.

அதுவும் ஏமாற்றமாகவே இருக்கிறது என்றார்.



## வரி குறைப்பு

செவ்வாய்க்கிழமை(28) முதல் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் வரிக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம்களின் நுகர்விற்காக சவுதி அரேபியா 50 மெட்ரிக் தொன் பேரிச்சம்பழங்களை இம்முறையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

குறித்த பேரிச்சம்பழங்கள் நாட்டிற்கு கிடைத்துள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்தார்.

அவற்றை பள்ளிவாசல்களுக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.



## காயமடைந்த இந்திய மீனவர்களை இந்திய துணைத்தூதுவர் சந்தித்தார்

பருத்தித்துறை கடற்பரப்பில் 13 இந்திய மீனவர்களுடன் படகொன்று அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டது.


இந்திய மீனவர்களின் படகில் ஏறி அவர்களை கைது செய்ய கடற்படை வீரர் முயற்சித்தார். இதன்போது கடற்படை வீரரை ஏற்றிக்கொண்டு மீனவர்களின் படகு தப்பிச்செல்ல முற்பட்டுள்ளது.

இதனையடுத்து ரோந்து படகில் சென்ற இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் இந்திய மீனவர்கள் இருவர் காயமடைந்தனர்.

கைதான இந்திய மீனவர்களை கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் பொறுப்பேற்க மறுத்துள்ள நிலையில் பருத்தித்துறை பொலிஸாரிடம் இந்திய மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

காயமடைந்த இந்திய மீனவர்களை யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி பார்வையிட்டுள்ளார். குறித்த மீனவர்களை நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## வாகனங்கள் இறக்குமதி குறித்து விசேட அறிவிப்பு




1969ஆம் ஆண்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2024 டிசம்பர் 18ஆம் திகதி முதல் இந்த ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி வரை ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரின் விதிமுறைகளுக்கு உட்பட்டு கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வாகனங்களை விடுவிப்பதற்கு சுங்கப் பணிப்பாளருக்கு இதனூடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2024 டிசம்பர் 18ஆம் திகதி முதல் 2025 ஜூலை 31ஆம் திகதி வரை வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான இயலுமை காணப்படுவதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாகனங்களைப் பதிவு செய்வதற்காக இறக்குமதியாளர் அல்லது கொள்வனவாளர், வரி செலுத்துவோருக்கான அடையாள இலக்கம் எனப்படும் TIN இலக்கம் உள்ளடங்கிய ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டுமென குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விதிமுறைகளின் கீழ் இறக்குமதி செய்யக்கூடிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட சில வாகனங்களுக்காக மாத்திரமே இவ்வாறு இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகன இறக்குமதியாளர்கள் தவிர்ந்த ஏனைய நபர்களுக்கு ஒருவருட காலப்பகுதிக்குள் இவ்வாறு ஒரு வாகனத்தை மாத்திரமே இறக்குமதி செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டு விமான சேவைகளை வருகிறது

சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்போது கணிசமானளவு அதிகரித்து வரும் நிலையில், விமான நிலையங்களில் வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் இந்த கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 20 புதிய பதிவு கருமபீடங்களை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## முட்டையின் விலை பதுளையில் சரிந்தது

சமீபத்தில், முட்டையின் விலை அசாதாரணமாக 65 ரூபாயாக அதிகரித்துள்ளது, மேலும் பல நுகர்வோர் முட்டை சாப்பிடுவதை நிறுத்திவிட்டு மாற்று உணவுகளுக்கு மாறியதற்கு இதுவே காரணம் என்று நுகர்வோர் கூறுகின்றனர்.

ஆனால், முட்டையிடுதல் அதிகரிப்பால் முட்டையின் விலையை குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடைகளில் மட்டுமல்ல, பிரதான சாலையிலும் கூட போட்டி விலையில் முட்டைகள் விற்கப்படுவதை காணலாம்.

## “சலுகைகளை குறைக்கவோ நீக்கவோ முடியாது”

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், தேசிய மக்கள் சக்தியின் (NPP) விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ஓய்வூதிய பலன்களை ரத்து செய்யவோ அல்லது சீரமைக்க முடியாது என்பதை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அறிவார் என்றார்.

“அதாவது, தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனத்தை தயாரித்த குழுவில் நியாயமான சட்ட அறிவு உள்ள எவரும் பணியாற்றியதாக தெரியவில்லை,” என்று அவர் கூறினார்.

“ஜனாதிபதியின் பதவியை ஏற்றுக் கொண்டவுடன், அத்தகைய பதவியை வைத்திருப்பவர் அத்தகைய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பெறுவதற்கு உரிமையாளராகிவிடுவார். அதன் பின் ஓய்வூதியத்தை பாராளுமன்றம் தீர்மானிக்கும்.

இந்தச் சட்ட பிரிவைத் தொடர்ந்து செய்யப்படும் எந்த திருத்தமும், ரத்துசெய்தலும் அல்லது மாற்றியமைக்கபடுதலும், அதைத் தொடர்ந்து செய்யப்படும் சட்டமும் அல்லது இந்தச் சட்டத்திற்கு முரணான எந்த விதியும் பின்னோக்கிச் செயல்படாது என்றார்.

நியாயமான எதிர்பார்ப்பு கோட்பாட்டின் படி, ஓய்வூதிய பலன்களை இல்லாது செய்தல் போன்று சீரமைக்க முடியாது என்றார்.

“இதற்கு ஒரு காரணம் இருக்கிறது. எதிர்பார்க்கப்படும் ஓய்வூதியப் பலன்களுக்கு ஏற்ப மக்கள் தங்கள் ஓய்வு கால வாழ்க்கையை திட்டமிடுகிறார்கள். அதற்கேற்ப பணத்தைச் சேமிக்க முனைகிறார்கள். மக்கள் ஓய்வூதிய பலன்களை எதிர்பார்க்கும் போது, அவர்கள் சேமிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை,” என்றார்.

### அதிக விலையில் அரிசி விற்றவருக்கு அபராதம்

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகாரசபை கடந்த நாட்களில் 140க்கும் மேற்பட்ட சோதனைகளை நடத்தியுள்ளதாகவும், மேலும் நாடு முழுவதும் சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் கூறுகிறது.

### சிலுவையின் காலில் இருந்து வடிந்த நீர்

சகோதர மதத்தினர், இராணுவத்தினர், பொலிஸார், என பலர் இந்த காட்சியை பார்வையிட்டதுடன் புகைப்படங்களையும் பிடித்தனர்

சம்பவம் தொடர்பாக ஆலய பங்குத்தந்தையால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக தகவல்களை வெளியிட முடியும் என கப்பலேந்தி மாதா ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## மாவைக்கு வருத்தம்

வீட்டில் தவறி விழுந்த நிலையில் தலையில் நரம்பு வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக அவருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு உள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிவாக்ஷர கௌசிக குருகுலத்தின் ஆண்டு விழா




■ புகஜிந்தன்

சிவாக்ஷர கௌசிக குருகுலத்தின் கற்கை நெறியினை நிறைவு செய்த அந்தண சிவாச் சாரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா இந்து சமய பேரவை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டுள்ளதுடன் பிரம்மசிறி ப.சிவானந்தா சர்மா (கோப்பாய் சிவம் ஐயா) தொடர்ச்சியாக இந்தக் குருகுலத்தை நடத்த வேண்டும். அதன் மூலம் பல அந்தண சிவாச்சாரியர்களை அவர் உருவாக்க வேண்டும் என்றும் ஆளுநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச.லலீசன், இந்து சமயப் பேரவையின் தலைவர் சக்திகிரீவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.















## இந்திய மீனவர்கள்
# 13 பேர் கைது





■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 13 பேர் செவ்வாய்க்கிழமை (28) அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது நடவடிக்கையின் போது குறித்த மீனவர்கள் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொலிஸ் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் இருவரையும், தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன் மற்றும் ஜெயானந்தமூர்த்தி றஜீவன் ஆகியோர் பார்வையிட்டனர்.

## சஜித்தை சந்தித்தார் கெத்தரின் வெஸ்ட்



ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசுபிக் பிராந்திய அமைச்சர் கெத்தரின் வெஸ்ட் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர்களுக்கிடையிலான விசேட சந்திப்பொன்று திங்கட்கிழமை (27) கொழும்பில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசுபிக் பிராந்திய அமைச்சர் திருமதி. கெத்தரின் வெஸ்டின் பிரத்தியேக செயலாளர் ரோப் கோர், இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக்ஸ், பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் அலெக்சாண்டர் ஸ்மித் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசுபிக் பிராந்திய அமைச்சர் திருமதி. கெத்தரின் வெஸ்ட் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர்கள் இடையே இந்நாட்டின் பல்வேறு பொருளாதார, சமூக, அரசியல் விடயங்கள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றன. இந்நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும்,



சுற்றுலாத் துறை தொடர்பாக ஐக்கிய இராச்சிய மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் இந்த தூதுக்குழுவினரிடம் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பில், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன ராஜகருணா, முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்தன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.



## புதிய தளபதி நியமனம்

இலங்கை விமானப்படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்துல எதிரிசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் 29 ஜனவரி 2025 புதன்கிழமை முதல் அமலுக்கு வரும்.

எதிர்வரும் ஜனவரி 29ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள இலங்கை விமானப்படையின் தற்போதைய தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்சவை அடுத்து வாசு பந்துல எதிரிசிங்க பதவியேற்றுள்ளார்.

## இ–டிக்கெட் மோசடி மற்றுமொருவர் கைது

இ- ரயில் டிக்கெட் முன்பதிவு கணினி அமைப்பிலிருந்து வாங்கிய ரயில் டிக்கெட்டுகளை அதிக விலைக்கு விற்று சுற்றுலா வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

கடுகண்ணாவ, உலுகே தென்னன பகுதியில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இலங்கை ரயில்வே துறை மற்றும் இலங்கை மொபிடெல் நிறுவனத்தால் இணைந்து இயக்கப்படும் ஆன்லைன் ரயில் இருக்கை முன்பதிவு முறை மூலம் இந்த மோசடியைச் செய்ததற்காக, குற்றப் புலனாய்வுத் துறையின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதான சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐஸுடன் ஒருவர் கைது

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு (கோணஹேன முகாம்) கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடவத்தை , பஹல கரகஹமுன பிரதேசத்தில் திங்கட்கிழமை (27) மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 27 கிராம் 700 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளை தன் உடமையில் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கடவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது



உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய புளியங்குளம் சேமமடு பிரதேசத்தில் திங்கட்கிழமை (27) மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் பெரியகுளம், கனகராயன்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் உட்பட இருவர் காயமடைந்த சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பாடசாலை வீதியில் வைத்து செவ்வாய்க்கிழமை (28) காலை இடம்பெற்றுள்ளது.

மூன்று இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் மிக வேகமாக பயணித்துள்ளதுடன் அவ்வீதியால் சென்ற பெண்ணொருவர் மீது மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மோதியுள்ளனர்.

விபத்தில் பெண்ணும் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞனும் படுகாயங்களுடன் வாழைச்சேனை



ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை போக்குவரத்துக்குப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


## வாடகைக்கு

தளபாடங்கள் இல்லாத இரண்டாவது மாடி , புதிதாக டைல்ஸ் பதிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட இரண்டு படுக்கையறைகள், இரண்டு குளியலறைகள், விறாந்தை, பேண்ட்ரி சமையலறை மற்றும் கராஜ் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு, மாதம் 80,000 ரூபாய்க்கு கொழும்பு -8 மங்கள வீதி, மெனிங் டவுன் வீட்டு வசதித் திட்டத்தில் உடனடி வாடகைக்கு உள்ளது. (இராணுவ மருத்துவமனைக்கு முன்பாக) பொரளை மற்றும் நாரஹேன்பிட்ட சந்திக்கு 2 கி.மீ. தூரம். தொடர்புகொள்ள - பஜீ 0705675564, 00447799967729 (வட்ஸ் ஆப்) 0775897125 (வட்ஸ் ஆப்) bajiwood@gmail.com

# ‘ஆட்டுக்கு= நாய்’ தீர்ப்பும் மனிதாபிமானமற்ற செயலும்

இப்போதெல்லாம் விலங்குகளை கொடுமைப்படுத்துவது பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். போதைப்பொருள் கடத்தல், மனித கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தலுக்குப் பிறகு, சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் உலகின் நான்காவது மிகவும் இலாபகரமான குற்றவியல் வர்த்தகமாக அறியப்படுகிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களால் பரவலாக மேற்கொள்ளப்படும் இந்த இந்த வர்த்தகத்தால். உலகளாவிய ரீதியில் 7,000க்கும் மேற்பட்ட உயிரினங்கள் அழிந்துபோகும் அபாயத்தில் இருக்கின்றன. முழு சுற்றுச்சூழல் அமைப்பும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. இது அறிவியல் ரீதியாக கடுமையான விகிதாசாரமற்ற விலங்கு கொடுமை என்று அழைக்கப்படுகிறது.

விலங்கு வதை சட்டங்களுக்கு மாறுபட்ட அணுகுமுறைகளை உலகெங்கிலும் உள்ள நீதிமன்றங்கள் எடுத்துள்ளன. உதாரணமாக, உணவு, உடை அல்லது பிற பொருட்களுக்காக விலங்குகளைக் கொல்லும் முறைகளை சில சட்டங்கள் ஒழுங்குபடுத்துகின்றன. பொழுதுபோக்கு, கல்வி, ஆராய்ச்சி அல்லது செல்லப்பிராணிகளாக விலங்குகளை வைத்திருப்பது தொடர்பான பிற சட்டங்கள் உள்ளன.

விலங்கு நல நிலைப்பாட்டைக் கொண்ட சிலர், உணவு, உடை, பொழுதுபோக்கு மற்றும் ஆராய்ச்சி போன்ற மனித நோக்கங்களுக்காக விலங்குகளைப் பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை என்று நம்புகிறார்கள்.

ஆனால் அது தேவையற்ற வலி மற்றும் துன்பத்தைக் குறைக்கும் வகையில், அதாவது ‘மனிதாபிமான’ முறையில் செய்யப்பட வேண்டும். ‘தேவையற்றது’ என்பதன் வரையறை பரவலாக வேறுபடுகிறது, எனவே இது விலங்குகளின் கிட்டத்தட்ட அனைத்து பயன்பாடுகளையும் உள்ளடக்கியிருக்கலாம் என்று மற்றவர்கள் வாதிடுகின்றனர்.


தொழில்துறை கால்நடை வளர்ப்பில், கால்நடை பண்ணைகள் பொதுவாக பெரிய நிலப்பரப்பில் தொழில்துறை வசதிகளின் நடுவில் உருவாக்கப்படுகின்றன. இவை சிறிய இடங்களில் அதிக எண்ணிக்கையிலான விலங்குகளை வைக்கப் பயன்படுகின்றன. இவை தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றின் தீவிர தொழில்துறை தன்மை, தினசரி நடைமுறைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு நடைமுறைகள் விலங்கு நலனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இந்நிலையில், முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள ஒட்டுசுட்டான் மத்தியஸ்த சபை, ஆட்டை கடித்து கொன்ற நாயை ஆட்டின் உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு ஒரு விசித்திர தீர்ப்பை ஞாயிற்றுக்கிழமை (26) வழங்கியது. நாயும் அந்த பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும். அந்த பெண், நாயை தூக்கிலிட்டு கொன்று அந்த படங்களை சமூக ஊடகங்களில் பதிவேற்றிவிட்டார். இந்நிலையில் 49 வயது பெண்ணை பொலிஸார் மிருகவதை சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

ஆட்டை இழந்த அந்தப்பெண், ஆத்திரத்தில் நாயை கொன்று இருக்கலாம். ஆனால், ஆட்டுக்கு சமம் நாய் என்பதை இந்த மத்திய சபை எவ்வாறு தீர்மானித்தது என்பதற்கு விளக்கம் கேட்கவேண்டும். தீர்ப்புகளை வழங்கும்போது இன்னுமின்னும் அதிகூடிய கவனம் செலுத்தவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.





## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மன வலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்து கொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத் தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்துவிடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில் ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம்.

கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருக்கலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களை கூட பெருந்தன்மையுடன் மன்னித்துவிடும் நபர்கள், பயத்தால் அல்ல; தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மெலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர் நிலைக்கு வரக்கூடாது என்ற எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம்.

எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவனைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# அரிசியின் அரசியல்



எம்.எஸ்.எம். ஐயூப்

தற்போது நாட்டில் நிலவும் அரிசி பிரச்சனை தமது காலத்தில் உருவானது அல்ல, அது நீண்ட காலமாக நிலவி வரும் பிரச்சனை என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தலைவர்கள் கூறுவது உண்மை ஆயினும் அதை தீர்ப்பது பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

கடந்த செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சாதாரணமாக எந்த ரகத்திலாயினும் ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 200 ரூபாவுக்கு குறைவாகவே இருந்தது. ஆனால் அத் தேர்தலுக்குப் பின்னர் சில சந்தர்ப்பங்களில் அவ்விலை 300 ரூபாவுக்கு மேலாகவும் அதிகரித்தது. சந்தையில் அரிசிக்கு ஏற்பட்ட தட்டுப்பாடே இதற்குக் காரணமாகும்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க பாரிய மற்றும் சிறிய அரிசி ஆலை உரிமையாளர்களுடனும் கலந்துரையாடினார். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாலை உரிமையாளர்கள் போதிய அளவு அரிசியை சந்தைக்கு வழங்க இணக்கம் தெரிவித்தனர். அதற்கு முன்னர் 220 ரூபாவாக இருந்த நாட்டரிசியின் கட்டுப்பாட்டு விலையை 230 ரூபாவாக உயர்த்தவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். ஆனால் அவர்கள் அவ்வாறு போதிய அளவு அரிசியை சந்தைக்கு விடுவிக்கவில்லை. இதன் காரணமாக அரசாங்கம் அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்தது. எனினும் விலை ஏற்றத்தை தடுக்க முடியாமல் போய்விட்டது.

அனுர குமார பதவிக்கு வந்து ஒரு வாரத்தில் அரிசி ஆலை உரிமையாளர்களுடன் கலந்துரையாட வேண்டிய நிலை ஏற்பட்டது என்றால் இந்த தட்டுப்பாட்டுக்கு தற்போதைய அரசாங்கம் காரணம் அல்ல தான். ஆயினும் அரசாங்கமே இப்பிரச்சினையை தீர்க்க வேண்டும். அதன் பிரகாரம் 70,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இறுதியில் இறக்குமதிக்கான அனுமதி காலம் ஜனவரி 10 ஆம் திகதி முடிவடைந்த போது 168,000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு இருந்தது. பற்றாக்குறையைப் பற்றிய போதிய தகவல்கள் இல்லாமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

ஒரு கிலோ கிராம் சுமார் 150 ரூபாவுக்கு சற்று குறைந்த விலைக்கே அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்கு அரசாங்கம் 65 ரூபாய் இறக்குமதி வரி விதிக்கிறது. இதன் மூலம் கடந்த டிசம்பர் மாதம் முதல் சுமார் ஒரு மாதத்துக்குள் அரசாங்கம் 1,000 கோடி ரூபாய் வரியாக சம்பாதித்துள்ளது. தனியார் துறைக்கு 90 சதவீதமான அரிசியை இறக்குமதி செய்ய இடமளித்ததற்கான காரணமும் வரி வருமானமாக இருக்கலாம். ஏனெனில் அரிசி இறக்குமதிக்காக ஒரு அரச நிறுவனம் மற்றொரு அரச நிறுவனத்திற்கு வரி செலுத்துவதன் மூலம் அரச வருமானம் அதிகரிக்க போவதில்லை.

இவ்வாறு வரி விதிக்காமல் குறைந்த விலையில் அரிசி விநியோகம் செய்யாது அரசாங்கம் தட்டுப்பாட்டை பாவித்து இலாபத்தை தேடுவதாக சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். எனினும், குறைந்த விலைக்கு இறக்குமதி அரிசி விற்பனை செய்தால் மக்கள் அதனையே நாடுவார்கள் என்றும் அதன் மூலம் தேசிய அரிசியின் விலையும் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு தேசிய விவசாயி பாதிக்கப்படுவார் என்று அரசாங்கம் வாதிடுகிறது.

இலங்கை மக்களின் வருடாந்த அரிசி பாவனை 24 இலட்சம் மெற்றிக் தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் கடந்த வருடம் நாட்டில் 45 இலட்சம் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் கூறினார். தேசிய மக்கள் சக்தியின் சில தலைவர்களும் ஆரம்பத்தில் அவ்வாறே கூறினர். புதிய நிலைமகளை கவனிக்கும் போது அரிசி உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், கையிருப்பு, விநியோகம் மற்றும் ஏற்படப் போகும் தட்டுப்பாடு அல்லது மிகை போன்ற விடயங்கள் தொடர்பாக முறையான தரவுகள் அரச நிறுவனங்களிடம் இல்லை என்பது தெரிகிறது.

கடந்த வாரம் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுடன் நடத்திய நேர்காணல் ஒன்றின் போது ஜனாதிபதி அனுர குமாரவும் தரவுகள் இல்லாமை அரிசி பிரச்சனையை தீர்ப்பதில் பெரும் தடையாக இருப்பதாக கூறினார்.

கடந்த 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அரச நிதிக் குழுக் கூட்டம் (Committee on Public Finance - CoPF) கூடிய போதும் இந்த தரவுகள் பற்றிய பிரச்சினை எழுந்தது. கூட்டத்தை அடுத்து கருத்து தெரிவித்த அக்குழுவின் தவிசாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும் நாட்டில் மதிப்பீட்டைப் பார்க்கிலும் பத்து இலட்சம் தொன் அரிசி குறைவாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் பெருமளவில் நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து ஒரு பகுதியை அடுத்த அறுவடை காலம் வரை பதுக்கி வைத்திருக்கிறார்கள், அந்த அறுவடை காலத்தில் அந்த நெல்லின் அரிசியை சந்தைப்படுத்தி அரிசி விலையை குறைத்து அதை காட்டி அவர்கள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்கிறார்கள், அதன் பின்னர் அந்த நெல்லின் அரிசியை மீண்டும் பதுக்கி அரிசி விலையை ஏற்றுகிறார்கள் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தொன்று இருக்கிறது. இது சரியாக இருக்கலாம்.

அரசாங்கம் இதை முறியடிப்பதாக இருந்தால் அரசாங்கத்தின் கையிருப்பில் நெல் அல்லது அரிசி இருக்க வேண்டும். அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியை பதுக்கி செயற்கையாக விலையை ஏற்றும் போது அரச நெல் சந்தைப்படுத்தும் சபையின் கையிருப்பில் உள்ள அரிசியை சந்தைப்படுத்தி அச்செயற்கை விலை ஏற்றத்தை முறியடிக்க வேண்டும் என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

ஆயினும் கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் நெல்லை கொள்வனவு செய்யாமல் நெல் மற்றும் அரிசி சந்தைகளை பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்துள்ளனர். அதற்காக அவர்கள் அரிசி ஆலை உரிமையாளர்களிடம் சன்மானம் பெற்றிருக்கலாம்.

இப்போது பெரும் போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. நாட்டில் நெல் உற்பத்தியில் 65 முதல் 70 சதவீதம் வரையிலான அரிசி உற்பத்தி பெரும்போகத்திலேயே இடம்பெறுகிறது. எனவே, அரசாங்கம் இப்போதே அரிசி உற்பத்தி களஞ்சியப்படுத்தல், கையிருப்பு விநியோகம் போன்றவற்றின் தரவுகளை தயாரித்து இவ்வருட இறுதியில் ஏற்படக் கூடிய தட்டுப்பாட்டை எதிர்நோக்க தயாராக வேண்டும். இவ்வாறு அந்த தகவல்களை முறையாக கையாளப் போவதாகவே அரசாங்கம் கூறியுள்ளது.

அதேபோல், நீண்ட காலமாக நாடெங்கிலும் கைவிடப்பட்டு இருந்த 200க்கு மேற்பட்ட நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியசாலைகள் இராணுவத்தினரால் சுத்தப்படுத்தபட்டுள்ளன. ஆனால் நெல் சந்தைப்படுத்தும் சபையின் அரிசி கொள்வனவு இன்னும் ஆரம்பமாகவில்லை. நெல்லுக்கான உத்தரவாத விலை ஒன்றை நியமிக்குமாறு சில விவசாயிகள் கோரிய போதிலும் அரசாங்கம் அதையும் செய்யவில்லை.

உற்பத்தி செலவுக்கு அதன் மூன்றில் ஒன்றை சேர்த்தே உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும் எனவும் அது சுமார் 130 ரூபாவாகும் என்றும் கமநல துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன கூறியிருந்தார். அது போதுமானதல்ல என்று விவசாய சங்கங்கள் அதை நிராகரித்தன.

இதற்கிடையே தனியார் ஆலை உரிமையாளர்கள் ஒரு கிலோ கிராம் நெல்லை 80, 90 ரூபாய் போன்ற குறைந்த விலைக்கே தற்போது கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர். என்றும் அரசாங்கம் உடனடியாக உத்தரவாத விலையை அறிவிக்க வேண்டும் என்றும் சில பகுதிகளில் விவசாயிகள் கூறுகின்றனர். ஆனால், உத்தேச உத்தரவாத விலையான 130 ரூபாவுக்கு அதிகமாக தனியார் வர்த்தகர்கள் தற்போது நெல் கொள்வனவு செய்வதாகவும் எனவே உத்தரவாத விலையை உடனடியாக அறிவித்தால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் பிரதி அமைச்சர் கூறுகிறார். அதாவது அரசாங்கம் நெல் கொள்வனவு செய்யாதா?

இதற்கிடையே அரிசி ஆலை உரிமையாளர்கள் கிலோ கிராம் 170 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்வதாகவும் அதற்கு குறைவாக அரசாங்கத்துக்கு நெல்லை விற்க முடியாது என்றும் மற்றொரு விவசாய சங்கம் கூறியிருந்தது. ஐந்து கிலோ கிராம் நெல்லில் மூன்று கிலோ கிராம் அரிசியை பெற முடியும் என்று விவசாய அமைச்சின் இணையத்தளம் கூறுகிறது. அதன் படி 170 ரூபாவுக்கு நெல்லை கொள்வனவு செய்தால் அரிசியின் விலை 285 ரூபாவாகும் தொழிற்சாலை மற்றும் போக்குவரத்துச் செலவுகளுடன் அரிசி விலை 300 ரூபாவை தாண்டுவதை தடுக்க முடியாது. 130 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டால் கட்டுப்பாட்டு விலையான 230 ரூபாவுக்கு அரிசி சந்தைக்கு வர முடியும்.

மற்றொரு பிரச்சினை என்னவென்றால் அரசாங்கம் நெல்லுக்கு 130 ரூபாய் உத்தரவாத விலையை நியமித்து கொள்வனவு செய்தால் அரிசி ஆலை உரிமையாளர்கள் அதை விட சற்று அதிக விலைக்கு நெல் கொள்வனவு செய்வர். உத்தரவாத விலைக்கு அதிகமாக கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கூற முடியாது. எனவே, அரசாங்கத்தின் நெல் களஞ்சியப்படுத்தும் திட்டம் தோல்வி அடையலாம். மீண்டும் அரிசி சந்தை ஆலை உரிமையாளர்களின் கையில் சென்றடையலாம்.

அரசாங்கம் நீர்ப்பாசனங்களை பராமரிக்கிறது, மானிய விலையில் உரம் வழங்குகிறது, வெள்ளம் அல்லது வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டால் நஷ்ட ஈடு வழங்குகிறது, விவசாயக் கடன் வழங்குகிறது. ஆனால், விவசாயிகள் இலாபத்தை கருதி தனியார் துறையினருக்கு நெல்லை விற்க விரும்புகின்றனர். அதனால் பின்னர் அவர்களே சுரண்டப்படுகிறார்கள். அரிசி பாவனையாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். இது ஒரு இடியாப்ப சிக்கலாகும். அரிசி பிரச்சினைக்கு அதிரடியான தீர்வை எடுத்து, கையிருப்பை தக்கவைத்துக்கொள்ளாவிடின், மீண்டும், மீண்டும், அரிசி பிரச்சினை ஏற்படும். ஆகையால், பொறுப்பு கூறவேண்டிய தரப்புகள், கவனம் செலுத்தவேண்டும். இல்லையேல், சிக்கல்கள் ஏற்படுவதை தவிர்க்கவே முடியாது.

## கடிதங்கள்

### உயிரை பணயம் வைக்கும் பயணம்

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலகப் பிரிவில் அடை மழை மற்றும் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக தங்களது இயல்பு வாழ்க்கை இரண்டு வாரங்களாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவசர தேவைகளுக்காக உயிரை பணயம் வைத்து நகருக்கு வர வேண்டியுள்ளதாகவும் அங்கலாய்க்கின்றனர்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன் இரண்டு விவசாயிகள் நகர்புறத்திற்கு வந்து பொருட்களைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பும் போது காட்டு வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர். அரசாங்கத்தினால் படகுபாதை சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் ஆபத்தான வீதிகளில் பயணம் செய்து மிகவும் சிரமப் படுவதை தற்போது காணக் கூடியதாக உள்ளது.

அப்பகுதியில் இராணுவத்தினர் மனிதாபிமான உதவிகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும் தங்களது அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் மிகவும் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வருவதை காணக் கூடியதாக உள்ளது. இரவு நேரங்களில் தங்களுக்கு மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்த எந்தவித போக்குவரத்துகளும் இன்றி தாம் கஷ்டப்படுவதாகவும் காட்டு யானை அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மிகவும் ஆபத்தான வாழ்க்கையை அவர்கள் தற்போதும் வாழ்ந்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

– வ.சக்தி



# இலங்கையில் சமூக நலன்களின் வரலாறு

ஆர் .எம்.நிஹாஷ்,
சமூகப்பணி இளங்கலை மாணவன் (சிறப்பு)
முதலாம் வருடம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்.

சமூக நலன் என்பது தனிநபர்களினதும் சமூகங்களினதும் நல்வாழ்வை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட பரந்தளவிலான பொதுக் கொள்கைகளையும் சேவைகளையும் உள்ளடக்கியது. அவசியமானவர்களுக்கு நிதி உதவி, சுகாதாரம், கல்வி மற்றும் வீட்டு வசதி ஆகியவற்றை வழங்கும் திட்டங்கள் இதில் உள்ளடங்கும். வறுமை, சமத்துவமின்மை மற்றும் சமூக அநீதியை நிவர்த்தி செய்வதன் மூலம் சமூகத்தில் உள்ள அனைவரின், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே சமூக நலனின் முக்கிய நோக்கமாகும்.

சமூக நல அமைப்புகள் பொதுவாக அரச தலையீடுகள் மூலம் செயற்படுத்தப்படுகின்றன, ஆனால் அரசு சாரா நிறுவனங்கள், கூட்டுறவு சமூகப் பொறுப்பு மற்றும் சமூகம் சார்ந்த முன்முயற்சிகளும் இதில் உள்ளடங்கலாம். சமூக நலன்களின் நோக்கம் பொருளாதார ஆதரவுக்கு அப்பாற்பட்டது இது சமூக உள்ளடக்கத்தை மேம்படுத்துவதையும், வளங்களுக்கான நியாயமான அணுகலை உறுதி செய்வதையும், ஒட்டுமொத்த சமூக நலனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## I. காலனித்துவ கால தாக்கங்கள்

### முறையான கல்வி மற்றும் சுகாதாரம் பற்றிய அறிமுகம்

இலங்கையின் காலனித்துவ சகாப்தம் 16 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நீடித்தது.இந்த நேரத்தில், மூன்று பெரிய ஐரோப்பிய சக்திகளான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆகியனஆட்சி செய்தன. இந்த ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகளில் தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்தி, முறையான கல்வி மற்றும் சுகாதார அமைப்புகளின் அபிவிருத்தியை வடிவமைத்தனர்.

### போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்கள்

போர்த்துக்கேயர் (1505-1658) மற்றும் ஒல்லாந்தர் (1658-1796) ஆட்சிக் காலங்களில், வர்த்தக வழிகள் மற்றும் வளங்களைக் கட்டுப்படுத்துவதில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டது. சமூக நலனில் அவற்றின் தாக்கம் குறைவாகவே காணப்பட்டது. எனினும், அவை எதிர்கால முன்னேற்றங்களுக்கு அடித்தளமாக அமைந்தன. போர்த்துக்கேயர்கள், குறிப்பாக உள்ளூர் மக்களை மதம் மாற்றுவதற்காக தேவாலயங்களையும் பாடசாலைகளையும் நிறுவுவதன் மூலம் கிறிஸ்தவத்தை அறிமுகப்படுத்தினர். இது தற்செயலாக சில அடிப்படை கல்வி வாய்ப்புகளையும் உருவாக்கியது. ஆரம்பக் கல்வியின் மிகவும் கட்டமைக்கப்பட்ட முறையை உருவாக்குவதன் மூலம் இந்தப் போக்கினை போர்த்துக்கேயர்கள் தொடர்ந்தனர். எனினும், அது குறிப்பிட்ட சமூகங்களுக்கு, குறிப்பாக கிறிஸ்தவத்திற்கு மாறுபவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது.

### பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலம்

பிரித்தானிய காலனித்துவ காலத்தில் (1796-1948) சமூக நலனில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பிரித்தானியநிர்வாகம் முறையான மற்றும் பரவலான கல்வியையும் சுகாதார முறையையும் அறிமுகப்படுத்தியது. இது இலங்கையில்நவீன சமூக நல கட்டமைப்புகளுக்கு அடித்தளமிட்டது.



### கல்வி

திறமையான நிர்வாகம் மற்றும் வர்த்தகத்திற்கு கல்வி கற்ற மக்கள் அவசியம் என்பதை உணர்ந்த பிரித்தானியகாலனித்துவ அரசாங்கம், இலங்கையின் கல்வி முறையில் பாரிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. 1836ஆம்ஆண்டில், அரச நிதியுதவியுடன் கூடிய கல்வி முறையை உருவாக்குவதற்கு கோல்புறுக் கமரூன் ஆணைக்குழுவின்பரிந்துரைகள் வழிவகுத்தன. புதிய பாடசாலைகள் நிறுவப்பட்டன. மிஷனரி பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

பாடசாலைகளைக் கண்காணிக்கவும், கல்வியை முறையானதாக மாற்றவும், 1869ஆம் ஆண்டு அரச கல்வித் திணைக்களம்உருவாக்கப்பட்டு, இவ்விடயங்களை மேலும் அணுகக்கூடியதாக மாற்றியது. முதலில் சரியான மேற்பார்வை மற்றும்நிர்வாகம் இல்லாத போதிலும், பல கிறிஸ்தவ பாடசாலைகள் பௌத்த, இந்து மற்றும் முஸ்லிம் அமைப்புகளை தமதுசொந்த பாடசாலைகளை நிறுவ வழிவகுத்தன. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், பிரித்தானியர்கள் இலங்கையின்நவீன கல்வி முறைக்கு வலுவான அடித்தளத்தை அமைத்து கல்வி வாய்ப்புகளை பெரிதும் விரிவுபடுத்தினர்.

### சுகாதார பராமரிப்பு

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில், சுகாதாரத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நாடு முழுவதும்மருத்துவமனைகளையும் சிகிச்சை நிலையங்களையும் அமைத்ததன் மூலம் ஆங்கிலேயர்கள் மேற்கத்திய மருத்துவநடைமுறைகளை அறிமுகப்படுத்தினர். 1870இல் நிறுவப்பட்ட கொழும்பு மருத்துவக் கல்லூரியானது. மேற்கத்தியமருத்துவத்தில் உள்ளூர் மருத்துவப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் முக்கிய பங்காற்றியது. பெரியம்மை தடுப்பூசி பிரச்சாரங்கள் மற்றும் மலேரியாவைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் போன்ற பொது சுகாதார முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்பாடுகள் யாவும், மக்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் ஆயுட்காலத்தையும் பெரிதும் மேம்படுத்தின.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் சமூக நலன் மற்றும் பாதுகாப்புகட்டமைப்புகளின் பரிணாம வளர்ச்சி சுதந்திரத்திற்குப் பின்னரான ஆரம்ப சகாப்தம்: ரேஷன் முறை

1948இல் சுதந்திரம் பெற்ற பின்னர், அப்போது சிலோன் என்று அழைக்கப்பட்ட இலங்கை. உணவுப் பாதுகாப்பையும்அத்தியாவசியப் பொருட்களின் நியாயமான விநியோகத்தையும் உறுதிப்படுத்துவதற்கு போர்க்கால ரேஷன் முறையைவைத்திருந்தது. அரிசி, சீனி மற்றும் கோதுமை மா ஆகியவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளும் வகையில், மக்களுக்கு ரேஷன் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இந்த முறையானது, மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்திசெய்வதையும், உணவு பற்றாக்குறையை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

### 1970களில் நிலவிய பொருளாதார நெருக்கடி

1970களில், உலகளாவிய எண்ணெய் நெருக்கடி, தேயிலை மற்றும் இறப்பர் போன்ற முக்கிய ஏற்றுமதிகளுக்கான மோசமான வர்த்தக நிலைமைகள் உட்பட பாரிய பொருளாதார சவால்களை இலங்கை எதிர்கொண்டது. இந்தகாரணிகள், உள்நாட்டு பணவீக்கத்துடன், இலங்கையின் பொருளாதாரத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியது. உணவுப்பற்றாக்குறையை மோசமாக்குகிறது மற்றும் ரேஷன் முறையைச் சார்ந்திருப்பதை அதிகரித்தது. ரேஷன் பொருட்களின்நிலையான விநியோகம் மற்றும் சிறந்த தரத்தை பேணுவதில் அரசாங்கத்திற்கு சிக்கல் நிலை காணப்பட்டது. இதுபொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

### உணவு முத்திரைகளுக்கு மாற்றம்

1977இல் ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் தேர்தல் ஒரு மாற்றத்தைக் குறித்தது. இந்த மாற்றம் பொருளாதாரதாராளமயமாக்கலை நோக்கியதாக இருந்தது. 1978இல், அவரது அரசாங்கம் ரேஷன் முறையை ஒழித்து, உணவுமுத்திரைத் திட்டத்தை கொண்டுவந்தது. இந்தப் புதிய கட்டமைப்பானது, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்குகுறிப்பிட்ட உதவிகளை வழங்குவதன்மூலம்நிர்வாகச்செலவுகளைக்குறைத்துசெயற்திறனைமேம்படுத்துவதைநோக்கமாகக் கொண்டிருந்தது. அத்தியாவசியப் பொருட்களை சந்தை விலையில் கொள்வனவு செய்வதற்கு, பயனாளிகள்உணவு முத்திரைகளைப் பயன்படுத்தலாம். அதிக நுகர்வோர் தெரிவு மற்றும் நெகிழ்வுத்தன்மையை பேணும் வகையில்,அரசாங்கம் இந்தப் பொருட்களுக்கு ஓரளவு மானியம் வழங்கியது.

### ஜனசவிய நிகழ்ச்சித்திட்டம்

1989ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஜனசவிய திட்டம் வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டது. குறைந்தவருமானம் கொண்ட குடும்பங்கள் மத்தியில் பொருளாதார தன்னிறைவை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக்கொண்டமைந்தது. இது, சிறிய அளவிலான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு, நிதியுதவிகள், தொழிற்பயிற்சி மற்றும்ஆதரவை வழங்கியது. நீதி மானியங்களுடன் கட்டாய சேமிப்புத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. செயற்திட்டத்தின்நிறைவில், பயனாளிகள் தாம் சேமித்த தொகையை மூலதனமாகப் பயன்படுத்த முடியும்.

### சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்

1995ஆம் ஆண்டு, ஜனசவிய திட்டத்திற்கு பதிலாக சமூர்த்தித் திட்டம் கொண்டுவரப்பட்டது. இது வறுமையைஒழிப்பதற்கான மிகவும் விரிவான அணுகுமுறையை வழங்கியது. சமுர்த்தி நிதி உதவியை சேமிப்பு மற்றும் கடன்திட்டங்களுடன் இணைத்தது. பயனாளிகளின் சமூக- பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான சமூக மேம்பாட்டுத்திட்டங்களும் இதில் அடங்கும். பயனாளிகளின் சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக, சமுர்த்தி நிதி உதவியை சேமிப்பு. கடன் திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு திட்டங்களுடன் இணைத்தது. இலங்கையின்சமூக நலன்புரி முயற்சிகளுக்கு இது ஒரு இடமாக மாறிய அதேவேளை,

இவ்வேலைத்திட்டம் பிரச்சினைகளையும் எதிர்கொண்டது. இந்த பிரச்சினைகளில் அரசியல் மயமாக்கல் மற்றும் இலக்கு வைப்பதில் நிறமையின்மை ஆகியவை அடங்கும்.



# சமூகப் பணி கல்வி பாதையில் ஒரு பயணம்

பால்ராஜ் ஹரிணி
சமூகப்பணி இளமானி சிறப்பு பட்ட கற்கைநெறி 1ஆம் வருட மாணவி
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

சமூகப் பணி துறையில் நான் கற்க தொடங்கிய முதல் நாளே என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக இருந்தது. 2024 ஆகஸ்ட் 12 அன்று தொடங்கியது என் பயணம். எனது வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றி அமைத்த அந்த முதல் நாளை எப்படி மறப்பது?. சமூகப்பணி துறையை பயிலும் எனக்குள் முதல் செமஸ்டரில் ஏற்பட்ட மாற்றங்களையும் அதன் தாக்கங்களையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என் சிந்தனை பார்வை மற்றும் வாழ்க்கை முறையையே மாற்றி அமைத்த ஒரு முழுமையான கற்றல் அனுபவம் ஆகும்.

### புதிய உலகத்தின் வாசலில்,

நான் முதன் முதலில் சமூகப் பணி படிப்பை தேர்ந்தெடுத்த பொழுது இது வெறும் சமூக சேவையை மற்றும் ஏழைகளுக்கு உதவி செய்வதற்கான கற்றல் என்ற எளிய புரிதல் மட்டுமே இருந்தது. ஆனால் முதல் செமஸ்டர் வகுப்புகளே என் பார்வையை முற்றிலும் மாற்றின.

சமூகப் பணி என்பது தனிநபர், ,குடும்பம், சமூகம் என அனைத்து மட்டங்களிலும் மாற்றத்தை உருவாக்கும் ஒரு தொழில்முறை என்பதனை நான் உணர்ந்து கொண்டேன். மேலும் சமூகப் பணி என்பது ஆழமான கோட்பாடு மற்றும் நுட்பமான அணுகுமுறைகளையும் கொண்டது எனவும் அறிந்தேன்.

### தனிப்பட்ட மாற்றங்கள்,

வகுப்பறையில் கற்கும் பாடங்கள் என் சிந்தனை முறையை மாற்றியது. சமூகப் பிரச்சனைகளை தற்பொழுது வேறு கண்ணோட்டத்தில் பார்க்க ஆரம்பித்தேன். உதாரணமாக வகுப்பறையில் நடந்த நிகழ்வு ஒன்று விரிவுரையாளர் வறுமை பற்றி விவாதித்த போது அது வெறும் பொருளாதாரப் பிரச்சினை மட்டும் அல்ல பல சமூக காரணிகளின் விளைவு என்பதனை அறிந்தேன்.

மேலும் அசுவெசும, சமூர்த்தி திட்டங்கள் பற்றிய என்னுடைய எண்ணங்களும் மாறியது. சமூகப் பணியில் அடிப்படை கோட்பாடுகள் பாடம் மூலம் மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டேன். இதன் மூலம் என் குடும்பம், உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் உடனான உறவுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது அவர்களின் கண்ணோட்டத்தில் விடயங்களை பார்க்க முயற்சிக்கிறேன். பாடங்களின் போது விரிவுரையாளர்களின் கருத்துக்களுக்கும் மாணவர்களின் கருத்துக்களுக்கும் இடையே வேறுபாடுகளும் விவாதங்களும் இருந்த போது என்னுள் நான் விமர்சன ரீதியான சிந்தனையை வளர்த்துக் கொண்டேன்.

ஒரு பிரச்சனையை பல கோணங்களில் பார்க்கவும் அதன் காரண காரியங்களை ஆராயவும் கற்றுக் கொண்டேன். உதாரணமாக எங்கள் ஊரில் ஒரு சிறுவன் பள்ளியை விட்டு இடைநிறுத்தம் செய்யப்பட்டான்.

அதன் போது அதற்கான காரணங்களை பொருளாதார பின்னணி, குடும்ப சூழல் ,கல்வி சூழ்நிலை என பல கோணங்களில் ஆராய்ந்தேன்.

### முதல் செமஸ்டர் கற்றல்கள்,

வகுப்பறை செயல்பாடுகள் மூலம் தகவல் சேகரிப்பு, கேள்வி கேட்கும் முறை, மற்றும் செவிமடுத்தல் திறன் என்பவற்றை கற்றுக்கொண்டேன். இவை என் தினசரி வாழ்க்கையிலும் பயனுள்ளதாக மாறியுள்ளது. குழு செயல் திட்டங்களில் பங்கேற்பது ஒரு புதிய அனுபவமாக இருந்தது. ப்ரசென்ட்டேசன் ,நேர்காணல் திறன்களை பயிற்சி அமர்வுகளின் போது கற்றுக் கொண்டேன். எவ்வாறு உரையாட வேண்டும்? எப்படி கேள்விகள் கேட்க வேண்டும்? எவ்வாறு அவர்களின் நம்பிக்கை பெற வேண்டும்? என்பதை கற்றுக் கொண்டேன். வழக்கு ஆய்வுகளின் மூலம் ஆவணப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு திறன்களை பெற்றேன். இந்த திறன்கள் எனது ஆராய்ச்சி பணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளன. சமூக நீதி பாடப்பிரிவில் நமது சமூகத்தில் நிலவும் பல்வேறு அநீதிகளை பற்றி கற்றுக்கொண்டேன். இன்றும் நம் சமூகத்தில் சில மாவட்டங்களில் பாலின ஏற்றத்தாழ்வு மற்றும் சாதிய பாகுபாடு என்பன உண்டு. இது பற்றிய புரிதல் என்னை ஆழமாக பாதித்தது. மனித உரிமைகள் பாடப்பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமைகள் பற்றிய அவசியத்தை அறிந்தேன். களப்பணிகளை பற்றி விரிவுரையாளர்கள் கூறியதும் அதற்கான ஆர்வம் எதிர்காலத்தில் நாம் சமூகத்தில் பணி புரிவதற்கான அச்சத்தை தடுத்தது.

என்னுள் ஏற்பட்ட பெரிய மாற்றமாக நான் கருதியது, தனியார் அமைப்புகளில் பகுதி நேர வேலை வாய்ப்புகளிலோ அல்லது வர்க் ஷாப்களிலோ நான் இதுவரை கலந்து கொண்டதில்லை. சமூகத்தில் காணப்படும் குழு அமைப்புகளில் பங்கு பற்றி அதில் ஒரு உறுப்பினராகவோ இருந்ததில்லை. இப்போது அது பற்றிய அறிவும்,ஆர்வமும் என்னுள் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டுகிறது. மேலும் அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன். நிறைய தேடல்கள், நூலகங்கள் சென்று நூல்கள் வாசித்தல், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விளக்கம் என பல் அறிவையும் வளர்த்துக் கொண்டு இருக்கிறேன்.

### நிஜமாகவே கூற வேண்டுமென்றால் இந்த

முதல் செமஸ்டர் அனுபவங்கள் என்னுள் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூகப்பணி கல்வி மூலம் நான் இன்னும் நிறைய கற்க வேண்டிய உள்ளது. எதிர்காலத்தில் இந்த கல்வி மூலம் பெறும் அறிவு, அனுபவங்களை, திறன்களை சமூக நலனுக்காக பயன்படுத்த ஆர்வமாக காத்திருக்கிறேன். சமூகப் பணி கல்வி என்னை ஒரு புதிய மனிதனாக மாற்றி உள்ளது. நான் சமூக மாற்றத்தின் முகவராக செயல்பட இந்த கல்வி ஒரு அடித்தளமாக அமைந்தது. இது ஒரு தொடக்கம் மட்டுமே. இன்னும் நீண்ட பயணம் முன்னால் உள்ளது. இது வெறும் பட்டப்படிப்பு மட்டும் அல்ல. ஒரு வாழ்க்கைப் பயணம். சமூகப் பணி கல்வி மூலம் பெற்ற இந்த அனுபவங்கள் என் வாழ்நாள் முழுவதும் என்னுடன் இருக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இந்தப் பயணம் என்னை சிறந்த தொழில்வாண்மையான சமூகப் பணியாளராக உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்குள் வளர்ந்துள்ளது.

இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்:

# இலங்கையை வீழ்த்துமா அவுஸ்திரேலியா

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது காலியில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் தொடங்குகின்றது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளபோதும் பந்துவீச அதிக நேரங்களை எடுத்துக் கொள்வது



அதைக் கேள்விக்குறியாக்கும்.

உஸ்மான் கவாஜாவுடன் ட்ரெவிஸ் ஹெட் அணித்தலைவராக களமிறங்குகின்ற நிலையில், ஹெட்டின் இடத்தில் ஜொஷ் இங்லிஸ் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது. மிற்செல் ஸ்டார்க், ஸ்கொட் போலண்ட், நேதன் லையனோடு மற் குனுமன் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக காயம் காரணமாக பதும் நிஸங்கவை இலங்கை தவற விடுகின்ற நிலையில் அவரைக் குழாமில் ஒஷாத பெர்ணாண்டோ பிரதியிடுவாரெனக் கூறப்படுகிறது.

## புத்தளம் கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பொதுக்கூட்டம்

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கின் கேட்போர் கூடத்தில் அண்மையில் (24) இடம்பெற்றது.

மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். பஸ்ரின் தலைமையில் நடைபெற்ற இந்த பொதுக்கூட்டத்தில் மத்தியஸ்தர் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் உயர் பீட உறுப்பினரும், சிரேஷ்ட கால்பந்தாட்ட நடுவரும், உடற்கல்வி போதனாசிரியருமான கலாநிதி எஸ்.ஆர்.எம். ஆஸாத் இந்நிகழ்வுதனை நெறிப்படுத்தினார்.

எதிர்காலத்தில் மத்தியஸ்த்தர்



சங்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டன. பின்னர் பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகக் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவராக மீண்டும் எம்.ஏ.எம். பஸ்ரினும், செயலாளராக புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் உயர்பீட உறுப்பினரும், சுற்றுப்போட்டி இணைப்பாளரும், போட்டி ஆணையாளருமான எம். ஜெனூசனும், பொருளாளராக எம். அம்ஜத்தும், உப தலைவராக எம்.ஓ.எம். ஜாக்கிரும், உதவி செயலாளராக ஏ.ஏ.எம். கியாஸும், நிர்வாக உறுப்பினர்களாக லீக் உயர் பீட உறுப்பினர் எஸ். எம்.ஜிப்ரி மற்றும் எம்.ஜே.எம். அஷ்ரப்தீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

புத்தளம் கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பொதுக்கூட்டம்

## சிறந்த டெஸ்ட் வீரராக பும்ரா

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரராக இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா பெயரிடப்பட்டுள்ளார்.

கடந்தாண்டு 13 போட்டிகளில் 71 விக்கெட்டுகளை பும்ரா வீழ்த்தியிருந்தார்.

இங்கிலாந்தின் ஹரி ப்றூக் மற்றும் ஜோ றூட், இலங்கையின் கமிந்து மெண்டிஸைத் தாண்டியே ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரராக பும்ரா தெரிவாகியிருந்தார்.



## ஒப்பந்தத்தை இரத்துச் செய்த அல் ஹிலால், நெய்மர்

சவுதி அரேபியக் கால்பந்தாட்டக் கழகமான அல் ஹிலாலின் முன்களவீரரான நெய்மருடன் அவரது ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கான இணக்கப்பாட்டொன்றை எட்டியுள்ளதாக அக்கழகம் திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

அந்த்வகையில் தனது முன்னாள் பிரேஸிலியக் கழகமான சன்டோஸுக்குத் திரும்ப 32 வயதான நெய்மருக்கு வழியேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து 2023ஆம் ஆண்டு அல் ஹிலாலில் இணைந்த நெய்மர், அடுத்த பருவகாலம் வரையில் ஒப்பந்தத்தைக் கொண்டிருந்தபோதும் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்காக எஞ்சிய 65 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஊதியத்தில் 25 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை விட்டுக் கொடுத்திருந்தார்.



## ஜுவெண்டஸிலிருந்து விலகிய டனிலோ

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் பின்களவீரரான டனிலோ, தனது ஒப்பந்தத்தை இரத்துச் செயும் இரு தரப்பு இணக்கப்பாட்டைத் தொடர்ந்து ஐந்தரை ஆண்டுகளுக்குப் பின்னர் கழகத்தை விட்டு வெளியேறியுள்ளதாக அக்கழகம் திங்கட்கிழமை (27) தெரிவித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு ஜுவென்டஸில் இணைந்து 213 போட்டிகளில் விளையாடிய 33 வயதான டனிலோவின் ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைவதாய் இருந்தது.



அமெரிக்கா

ட்ரம்ப் – மோடி

## பெப்ரவரியில் சந்திப்பு?

“இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பெப்ரவரி மாதம் வெள்ளை மாளிகையில் வைத்து தன்னை சந்திப்பார்” என்று, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

“இன்று (செவ்வாயக்கிழமை -28) காலை, அவருடன் நீண்ட நேரம் பேசினேன். அவர் அடுத்த மாதம், அநேகமாக பெப்ரவரியில் வெள்ளை மாளிகைக்கு வருவார். இந்தியாவுடன் எங்களுக்கு நல்ல உறவு இருக்கிறது” என்றும் டிரம்ப் கூறினார்.

முதல் முறை ஜனாதிபதியாக பதவி வகித்த போது, டொனால்ட் ட்ரம்ப் கடைசியாக இந்தியாவுக்கு தான் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரம்ப் மற்றும் மோடி ஆகியோருக்கு இடையே




நல்ல நட்புறவு நீடிக்கிறது. இருவரும் 2019 செப்டெம்பரில் ஹூஸ்டனில் நடந்த இரண்டு வெவ்வேறு பேரணிகள் மற்றும் 2020 பெப்ரவரியில் அகமதாபாத்தில் ஆயிரக்கணக்கான மக்களிடம் உரையாற்றினர்.

2024 நவம்பர் மாதம் ஜனாதிபித தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதும் அவருடன் பேசிய முதல் மூன்று உலகத் தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர் ஆவார்.



இஸ்ரேல்

ட்ரம்பை சந்திக்க

## இஸ்ரேல் பிரதமர் திட்டம்

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அடுத்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்க திட்டமிட்டு வருவதாக, தி டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல், செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக அவர் வாஷிங்டன் டி.சி.க்கு பயணம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த பயணம் இறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் புரோஸ்டேட் அறுவை சிகிச்சை செய்து கொண்டு குணமடைவதால் நேதன்யாகுவின் உடல்நிலையை பொறுத்து இது குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.


தற்போதைய தகவல்களின் படி பயணம் செய்தால், தனது இரண்டாவது பதவிக்காலத்தில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்கும் முதல் வெளிநாட்டுத் தலைவராக நேதன்யாகு இருப்பார்.

முன்னதாக இஸ்ரேலுக்கு தற்காப்பு கருவிகள் வழங்கியதற்காக ஜனாதிபதி ட்ரம்புக்கு பெஞ்சமின் நேதன்யாகு ஜனவரி 26ஆம் திகதி நன்றி தெரிவித்தார்.

இஸ்ரேல்

வடக்கு காசாவுக்குள்

## பாலஸ்தீனியர்கள் நுழைய அனுமதி



வடக்கு காசாவுக்குள் பாலஸ்தீனியர்கள் நுழைய இஸ்ரேல் அனுமதி அளித்துள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனத்தின் காசாமுனையை, நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போர், 15 மாதங்களுக்கு பிறகு போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் முடிவுக்கு வந்தது.

இதில் ஹமாஸ் அமைப்பினர் தங்களிடம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவித்தது. அதற்கு ஈடாக பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்கிறது. போர் நிறுத்தத்தை அடுத்து, இடம்பெயர்ந்த மக்கள் தங்களது பகுதிகளுக்கு திரும்பி வருகிறார்கள்.

இதற்கிடையே, ஒப்பந்தப்படி, பணய கைதிகளில் அர்பெல் யாஹுட் என்ற பெண் பிணைக்கைதியை ஹமாஸ் விடுவிக்கவில்லை.

அவர் விடுதலை செய்யப்படும் வரை பாலஸ்தீனியர்கள் வடக்கு காசாவுக்கு திரும்ப அனுமதிக்க மாட்டோம் என்று, இஸ்ரேல் தெரிவித்தது. இந்நிலையில், அவர் வருகிற 1ஆம் திகதி விடுவிக்கப்படுவார் என்று, ஹமாஸ் தெரிவித்தது.

இது தொடர்பான பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்பட்டதையடுத்து, வடக்கு காசாவுக்குள் பாலஸ்தீனியர்கள் நுழைய இஸ்ரேல் அனுமதி அளித்துள்ளது.

இதனால் இலட்சக்கணக்கான பாலஸ்தீனியர்கள் கூட்டம் கூட்டமாக வடக்கு காசாவுக்கு திரும்புகிறார்கள். அவர்கள் நெட்சாரிம் பாதை வழியாக நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கடற்கரையை ஒட்டிய பிரதான வீதி முழுவதும் மனித தலைகளாக காட்சி அளிக்கிறது.

உத்திரபிரதேசம்

பிரயாக்ராஜ் நோக்கி புறப்பட்ட

## ரயில் மீது தாக்குதல்



பிரயாக்ராஜ் நோக்கி புறப்பட்ட சிறப்பு ரயில் மீது பயணிகள் கற்களை வீசி ஜன்னல்களை உடைப்பது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

ஜான்சி ரயில் நிலையத்திலிருந்து, திங்கட்கிழமை (27) இரவு பிரயாக்ராஜுக்கு புறப்பட்ட ரயில் ஹர்பால்பூரை வந்தடைந்தது. இதையடுத்து, ரயிலில் ஏற ஏராளமான பயணிகள் காத்திருந்தனர். அப்போது ரயில் கதவுகள் வெகுநேரமாகியும் திறக்காததால் கோபமடைந்த பயணிகள் ஜன்னல்கள் மீது கற்களை வீசினர். இதனால் ரயிலுக்குள் இருந்த பயணிகள் பீதி அடைந்தனர்.

உத்திரபிரதேசம்

திருவிழாவில் மேடை சரிந்து வீழ்ந்ததில்

## 7 பேர் பலி; 40 பேர் படுகாயம்



உத்தரபிரதேசத்தில் திருவிழாவில் மேடை சரிந்து வீழ்ந்ததில், 7 பேர் உயிரிழந்தனர்

உத்தரபிரதேச மாநிலம் படக்ட் மாவட்டத்தில் சமண (ஜெயின்) மத வழிபாட்டு தலம் உள்ளது. இந்த வழிபாட்டு தலத்தில் ஆண்டுதோறும் லட்டு திருவிழா நடைபெற்று வருகிறது. பத்கர்கள் லட்டுகளை கடவுளுக்கு படைத்து வழிபடுவது வழக்கம்.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான லட்டு திருவிழா, நேற்று (28) நடைபெற்றது. இத்திருவிழாவையொட்டி மதவழிபாட்டு தலத்தில் மூழ்கில் கம்புகளால் மேடை அமைக்கப்பட்டிருந்தது. அந்த மேடையில் 100க்கும் மேற்பட்டோர் ஏறி வழிபாடு நடத்த முற்பட்டனர்.

அப்போது எதிர்பாராத விதமாக மேடை சரிந்து விழுந்தது. இந்த சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 40 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 29, ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.